19.03.2024

அ.வ.எண்.52/2020

அஜின் (P.W.1)

<u>குறுக்கு விசாரணை :</u>

1. நான் இந்த வழக்கில் என்னவாக இருக்கிறேன் என்றால் 2-ஆம் வாதி ஆகும். 1-ஆம் வாதி எனது அண்ணன் ஆவார். வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் 286/3 ஆகும். வழக்கு சொத்தின் பழைய சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்து எங்களுக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் எங்கள் தாத்தா மூலம் கிடைத்தது. தாத்தாவின் பெயர் என்னவென்றால் பொன்னையன் ஆகும். எங்கள் தாத்தா மேற்படி சொத்தை எங்களுக்கு எவ்வாறு கொடுத்தார் என்றால் எங்கள் அப்பாவிற்கு வாரிசு அடிப்படையில் கிடைத்து அதன்பிறகு எங்களுக்கு எனது அப்பா எழுதிக்கொடுத்தார். வழக்கு சொத்து எனக்கும் எனது அண்ணனுக்கும் வாரிசு அடிப்படையில் தான் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். எனது தாத்தாவிற்கு வழக்கு சொத்து எவ்வாறு கிடைத்தது என்றால் அவர் விலைக்கு வாங்கியுள்ளார். அவர் விலைக்கு வாங்கிய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்து எத்தனை சென்ட் என்றால் 511/2 சென்ட் ஆகும்.

2. எனது தாத்தா எனது அப்பா பெயருக்கு கொடுத்து அதன்பிறகு சொத்து குறித்து ஏற்படுத்தப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம். எனது தாத்தா யாரிடம் இருந்து சொத்தை வாங்கினார் என்ற விவரம் தெரியுமா என்றால் சங்கரகுரு என்று நினைக்கிறேன். மேற்படி ஆவணங்கள் வா.சா.ஆ.1 மற்றும் 2 என்று சொன்னால் சரிதான். மேற்படி இரு ஆவணங்கள் தவிர வேறு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளோமா என்றால் செய்துள்ளோம். வழக்கு சொத்தில் என்ன உள்ளது என்றால் ரப்பர் மரம் பயிரிடப்பட்டுள்ளது.

( வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை பாதியில் நிறுத்தி வைக்கப்படுகிறது)